# 13 முப்பொருள்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சைவசமயத்தின் முடிந்த முடிபான பதி, பசு, பாசம் ஆகியவற்றின் உண்மை பற்றிப் பேசுகின்றது. இம் முப்பொருள்களும் என்றும் உள்ளவை, ஒன்றில் இருந்து மற்றொன்று தோன்றியது அன்று. இம்முப்பொருள்களையும் இறை, உயிர், தளை என்றும் கூறுவர். இவை அநாதியான நித்திய பொருள்களாகும்.



## பதி

பதியை இறை, கடவுள், சிவம், முதல்வன், பரமசிவன் எனவும் அழைக்கலாம். பதி என்பது தலைவர் எனப் பொருள்படும். பதி என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், விருப்பு வெறுப்பு இல்லாதவர், மிக்க அருளுடையவர், பதியை நாம் நமது புறக்கண்களாற் காண முடியாது. அவர் எமது மனதிற்கும், சொல்லுக்கும், செயலுக்கும் அப்பாற்பட்டவர். அவரை நாம் நமது அறிவினாலேயே உணர முடியும். பதிக்கு சொரூபலக்கணம், தடத்தலக்கணம் என இரண்டு இலக்கணங்கள் கூறப்படுகின்றன. அருவம், உருவம், அருவுருவம் என

மூவகைத் திருமேனிகளும் கூறப்படுகின்றன. பதி உயிர்கள் தோறும் ஒன்றாய், உடனாய், வேறாய், உள்ளார். எல்லா உயிர்களிலும் அவர் உறைந்துள்ளார். ஆதலால் நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுதல் வேண்டும்.

## பசு

பசு என்பதற்கு உயிர், ஆன்மா, சீவன் முதலான வேறு பெயர்களும் உண்டு. பசு என்னும் சொல்லுக்கு பாசத்தாற் கட்டுண்டது என்பது பொருளாகும். உயிர்கள் எண்ணற்றவை, பதியைப் போலவே அநாதியானவை, என்றும் உள்ளவை, உயிர்கள் அறிவுணர்வுகளை உடையனவாயினும் தாமாக அறியும் தன்மை இல்லாதன. உயிர்கள் தாம் செய்யும் செயல்களின் பலனை அனுபவிக்கின்றன.

நற்செயல்களைச் செய்யும் உயிர்கள் இன்பத்தையும், தீய செயல்களைச் செய்யும் உயிர்கள் துன்பத்தையும் அனுபவிக்கின்றன. உயிர்களின் இறுதி இலட்சியம் இறைவனை அடைதலாகிய முத்தியைப் பெறுதல் ஆகும். உயிர்களாகிய நாம் கடவுளுக்கும், சிவனடியார்களுக்கும் பெற்றோர்களுக்கும் தொண்டு செய்தல் வேண்டும். அது பிறப்பு, இறப்பை இல்லாமற் செய்து பேரின்பமாகிய முத்திக்கு வழிகாட்டும்.

## பாசம்

உயிர்களைப் பற்றி நிற்கும் பொருள் பாசமாகும். பாசம் என்பது பந்தித்து நிற்பது எனப் பொருள்படும். பாசம் உயிரை மாசுபடுத்துவது என்பதால் அதற்கு ‘மலம்’ என்ற பெயரும் பொதுவாக வழங்கப்படுகின்றது. ஆணவம், கன்மம், மாயை என பாசம் மூவகைப்படும். இவற்றை மும்மலங்கள் என்றும் கூறலாம்.இவை மூன்றும் அறிவில்லாத சடப்பொருள்களாகும். இவை உயிர்களின் அறிவை மயக்கி, துன்பத்தை இன்பமாகக் காட்டி, அவற்றை அனுபவிக்கச்செய்து, பிறவிகளை வழங்குகின்றது. உயிர்கள் கடவுளை அறியாதப்படி பாசம் தடை செய்கின்றது. எனவே நாம் பாசத்திலிருந்து விடுபட்டு, இறைவனை அறிய நல்வினை செய்வதுடன் கடவுளைப் பக்தியுடன் நாள்தோறும் வழிபடுவோமாக.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. முப்பொருள்களும் யாவை?

2. அவற்றை வேறு எப்பெயர்களால் அழைக்கலாம்?

3. பதியின் மூவகைத் திருமேனிகளும் எவை?

4. பசு என்ற சொல்லின் பொருள் யாது?

5. மும்மலங்களும் யாவை?

## செயற்பாடு

★ பதியின் எண்வகைக் குணங்களை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

★ அவை தொடர்பாக ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## பாடச்சுருக்கம்

★ சைவசித்தாந்தம் என்னும் சொல்லுக்கு முடிந்த முடிவு என்பது பொருளாகும்.

★ பதி, பசு, பாசம் என்பன முப்பொருள்களாகும்.

★ அருவம், உருவம், அருவுருவம் எனும் முத்திருமேனிகளும் பதிக்கு கூறப்படுகின்றது.

★ பசு என்பது ஆன்மாவாகும்.

★ பசு என்ற சொல்லுக்கு பாசத்தாற் கட்டுண்டது என்பது பொருளாகும்.

★ பாசம் என்ற சொல்லுக்கு உயிர்களைப் பந்தித்து நிற்பது எனப் பொருள்படும்.

★ ஆணவம், கன்மம், மாயை என பாசம் மூவகைப்படும்.